**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

O.S.No. 157/2019 தேதி- 21.11.2025
(P.W.1) - செல்வகுமார்

**2** மற்றும் **3** பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1. இந்த வழக்கில் 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக நான் எவ்வித பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் பி-பட்டிகை சொத்தாக தும்பகோடு பி-வில்லேஜ் புதிய புல எண்.397/1A1C என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்து புறம்போக்கு நிலம் அல்ல பட்டா நிலம் என்றால் சரிதான். வழக்கு பி-பட்டிகை சொத்து கால்வாய் புறம்போக்கு நிலம் என்று தான் நினைத்து இந்த வழக்கில் 2 மற்றம் 3 பிரதிவாதிகளை கட்சியாக சேர்த்தேன் என்றால் சரிதான். வழக்கில் 2 மற்றம் 3 பிரதிவாதிகள் தேவையற்ற தரப்பினர் என்று தெரியவந்த பின்னரும் அவர்களை இந்த வழக்கில் இருந்து நீக்க எந்த மனுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன 2 மற்றம் 3 பிரதிவாதிகளை எந்த வழக்கு மூலம் இல்லாமல் தாக்கல் செய்துள்ளதால் அவர்களுக்கு செலவு தொகையுடன் அவர்களுக்கு எதிராக வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.